# பத்திரிக்கை செய்தி

## அரசு ஒப்பந்தத்தில் செய்த வேலைக்கான பில்லை பாஸ் செய்வதற்காக ரூ.30,000/- லஞ்சம் கேட்டு பெற்ற உதவி செயற் பொறியாளர் கைது

புகார்தாரர் மணிமாறன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, ஜெயங்கொண்டம் பிரிவில் தனியார் காண்ட்ராக்டராக அரசு பணிகளை செய்து வருகிறார். இவர் ஏற்கனவே அரசு ஒப்பந்தப்படி செய்த வேலைகளுக்காக ரூ.15,00,000/-க்கு உண்டான பில்களை சமர்ப்பித்துள்ளார். திருமதி.வகிதாபா, உதவி செயற் பொறியாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, ஜெயங்கொண்டம் அவர்கள், புகார்தாரர் சமர்பித்த பில்களை அரசிடமிருந்து தொகையினை பெற்றுத்தர தனக்கு லஞ்சமாக ரூ.30,000/- (2% கமிசன்) கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அரியலூர் பிரிவில் புகார் மனு சமர்பித்துள்ளார். மனுதாரர் கொடுத்த புகார் பேரில் இன்று பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.வகிதாபா, உதவி செயற் பொறியாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, ஜெயங்கொண்டம் அவர்கள் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.30,000/-யை பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.